தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

22.11.2012 P.M

23.11.2012 A.M

## முருங்கைக்காய் திடீர் விலை உயர்வு : கிலோ ரூ.60



முருங்கைக் காய் திடீரென விலை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ ரூ.60-க்கும், சில்லறை விலையில் ஒரு காய் ரூ.8 வரை விற்கப்படுவதால் குடும்பத் தலைவிகள் கவலை அடைந்துள்ளனர்.

கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரை விற்பனை செய்து வந்த முருங்கைக் காய், கடந்த சில தினங்களாக திடீரென விலை அதிகரித்து கிலோ ரூ. 60 வரை விற்கப்படுகிறது.

அதை வாங்கிச் சென்று, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வியாபாரிகள் சில்லறை விலையில் கால் கிலோ ரூ.20-க்கும், ஒரு காய் ரூ.8 ரூபாய் வரை விற்கின்றனர். இதனால் குடும்பத் தலைவிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து கோயம்பேடு மார்க்கெட்டில் வியாபாரி ஒருவரை கேட்டபோது: விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து முருங்கைக் காய்கள் அதிகளவில் இங்கு கொண்டுவரப்படுகின்றன. தற்போது முருங்கைக்காய் வரத்து குறைந்துள்ளது. இதனால், கடந்த சில தினங்களாக விலை அதிகரித்துள்ளது. விரைவில் வரத்து அதிகரித்தால் முருங்கை விலை குறையும் என்றார்.

வியாழக்கிழமை நிலவரப்படி காய்கறி விலை (ஒரு கிலோ): தக்காளி ரூ.20, வெங்காயம் ரூ.25, முருங்கை ரூ.60, கோஸ் ரூ.15, கேரட் ரூ.30, பீன்ஸ் ரூ.35, அவரை ரூ.35, வெண்டை ரூ.20, கத்திரி ரூ.20, முள்ளங்கி ரூ.10, இஞ்சி ரூ.60, உருளை ரூ.30, கருணை ரூ. 20, நூக்கல் ரூ.20, பீட்ரூட் ரூ.20, பச்சைமிளகாய் ரூ.20.

## போர்லாக் ' விருது : விவசாய ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் தேர்வு




விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கு வழங்கப்படும் "போர்லாக்' விருதுக்கு இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த 2 விஞ்ஞானிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இருவரும் பாஸ்மதி அரிசி குறித்த ஆராய்ச்சியில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருபவர்கள். கோரமண்டல் இன்டர்நேஷனல் நிறுவனம் சார்பில், நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி டாக்டர் நார்மன் போர்லாக் பெயரில் வழங்கப்படும் இந்த விருதுக்கு 30 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் 5 பேர் கொண்ட தேர்வுக்குழு, இந்த ஆண்டுக்கான "போர்லாக்' விருதுக்கு டாக்டர் கே.வி.பிரபு, டாக்டர் அசோக் குமார் சிங் ஆகிய இருவரைத் தேர்ந்தெடுத்தனர்.

இதற்கான அறிவிப்பு நிகழ்ச்சி, சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் பேசியது:

பாஸ்மதி அரிசி பயிரின் தரத்தை மேம்படுத்தி, அதன் உயரத்தைக் குறைப்பது குறித்த ஆராய்ச்சி 1965ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிக மகசூலை அளிக்கவல்ல குறைந்த உயரத்திலான பயிர்கள், அதற்கான சிறந்த பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான ஆராய்ச்சி, சில நேரங்களில் சவால் நிறைந்தாக உள்ளது.

பாரம்பரியமாக பயிரிடப்படும் பாஸ்மதி அரிசி பயிர்கள் மிக உயரமானதாக உள்ளன. அதிகப்படியான மழை பெய்தால் அவ்வகைப் பயிர்கள் முற்றிலுமாக பாதிக்கப்படும். தற்போது விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இருவரும் "பூசா பாஸ்மதி 1121', "பூசா பாஸ்மதி 6' மற்றும் "பூசா பாஸ்மதி ஆர்.எச்.10' ஆகிய புதிய ரக பாஸ்மதி அரிசி ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் என்றார் அவர்.

புதுதில்லியில் நவம்பர் 28ஆம் தேதி நடைபெறும் விழாவில் "போர்லாக்' விருதுடன், ரூ. 5 லட்சம் ரொக்கப் பரிசு, தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

விழாவில், இந்திய திட்டக் கமிஷனின் துணைத் தலைவர் டாக்டர் மான்டெக் சிங் கலந்து கொண்டு, விருதுகளை வழங்குகிறார். "உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு' எனும் தலைப்பில் சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ராபர்ட் ஜிக்ளர் கோரமண்டல் சொற்பொழிவு ஆற்ற உள்ளார்.

## வலுவிழந்தது காற்றழுத்த தாழ்வு நிலை : கனமழை பெய்ய வாய் ப்பு

வங்கக் கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுவிழந்தது. இருப்பினும் வெள்ளிக்கிழமை (நவம்பர் 23) தமிழகத்தின் வட கடலோர பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்பு வங்கக் கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவிழந்து தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறியது. வியாழக்கிழமை அது மேலும் வலுவிழந்து குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது.

வலுவிழந்த போதிலும் தமிழகத்தின் வட கடலோர மாவட்டங்கள் மற்றும் தென் ஆந்திர கடலோரப் பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய கனமழையோ பெய்யக்கூடும் என வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாநிலத்தின் பிற இடங்களிலும் பரவலான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வியாழக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

சாத்தனூர் அணை - 100; பாடலூர் - 60; சங்கராபுரம் - 50; தொழுதூர், திருவள்ளூர் - 30; திருச்சி மாவட்டம் துறையூர் - 20; கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை, கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு - 10.

## உத்தரப்பிரதேசத்தில் விவசாயிகளின் கடன் தள்ளுபடி

உத்தரப்பிரதேசத்தில் 7.2 லட்சம் விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்து மாநில அரசு வியாழக்கிழமை உத்தரவிட்டது,

"சமாஜவாதி கட்சி தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிப்படி, கடன்கள் தள்ளுபடி செய்யப்படுவதாக' முதல்வர் அகிலேஷ் யாதவ் தெரிவித்தார். தனது தந்தையும் சமாஜவாதி கட்சித் தலைவருமான முலாயம்சிங் யாதவின் 74வது பிறந்த நாளை முன்னிட்டு இந்த அறிவிப்பை அகிலேஷ் யாதவ் வெளியிட்டுள்ளார். வியாழக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "கூட்டுறவு ஊரக மேம்பாட்டு வளர்ச்சி வங்கியில் ரூ.50 ஆயிரம் வரை விவசாயிகள் வாங்கிய கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுகின்றன. அந்த வகையில், ரூ.1,650 கோடி கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். இதன் மூலம் 7.2 லட்சம் விவசாயிகள் பயன் பெறுவர்' என்றார்.

## யூரியா உற்பத்திச் செலவைக் குறைக்க புதிய கொள்கை :மத்திய அரசு தகவல்

உர மானியத்தைக் குறைப்பதற்காக, யூரியா உற்பத்தி தொழிற்சாலைகளில், நாப்தா எரிபொருளுக்குப் பதில் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தும் கொள்கை வடிவமைக்கப்பட்டு வருகிறது என்று நாடாளு மன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில், கேள்வி நேரத்தின் போது பல்வேறு கேள்விகளுக்கு அந்தத்துறை அமைச்சர்கள் நேரடியாகவும், எழுத்து மூலமாகவும் பதிலளித்தனர். அவற்றின் விவரம் வருமாறு:

உரத் துறை: உரங்களுக்கு அளிக்கப்படும் மானியத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, நாப்தா (பெட்ரோலியம் சார்ந்த நீர்ம எரிபொருள்)வில் இயங்கும் யூரியா உரத் தொழிற்சாலைகள், இயற்கை எரிவாயுவில் இயங்கும் வகையில் மாற்றியமைக்கப்படும். இதன் மூலம் யூரியாவின் உற்பத்திச் செலவு பல மடங்கு குறையும். இதற்கான கொள்கை வடிவமைக்கப்பட்டு வருகிறது. உற்பத்தி செலவு குறைந்தால், மானியத்தின் அளவும் குறையும். இயற்கை எரிவாயுவில் இயங்கும் யூரியா உற்பத்தி தொழிற்சாலைகளாக மாற்ற, துரித நடவடிக்கை எடுக்கும்படி நிதியமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. தற்போது இயங்கி வரும் யூரியா உற்பத்தி அலகுகளில், புதிய விலைத் திட்டத்தை அமல்படுத்தவும், பரிசீலித்து வருகிறோம் என்று பதிலளித்துள்ளார் உரத்துறை மத்திய இணையமைச்சர் ஸ்ரீகாந்த் குமார் ஜேனா.

யூரியாவின் உற்பத்திச் செலவில் 80 சதவீதம் எரிபொருளுக்காகவே செலவிடப்படுகிறது. நாப்தா மூலம் இயங்கும் தொழிற்சாலைகளில் ஒரு டன் யூரியா உற்பத்தி செய்ய, ரூ.28 ஆயிரம்

செலவாகிறது. இயற்கை எரிவாயுவில் இயங்கும் தொழிற்சாலையில் டன்னுக்கு ரூ.8,500 மட்டுமே செலவாகும். கடந்த நிதியாண்டில் யூரியா மானியமாக ரூ. 25,000 கோடி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நிறுவனங்கள் விவகாரத் துறை:நிறுவனங்களிடையே போட்டித்தன்மையை உறுதி செய்யும் சட்டங்களை விரிவு செய்வதற்காக, "அறிவுசார் கூட்டாண்மை', ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெங்களூர், ஹைதராபாத், கொல்கத்தா, தில்லி, ஜோத்பூர், பாட்டியாலா, குவாஹாட்டி, ராஞ்சி, புணே, சோன்பட் பகுதிகளில் உள்ள சட்டக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் இந்த அமைப்பை, நிறுவனங்களுக்கிடையே போட்டியை உறுதி செய்யும் ஆணையம் (சிசிஐ) ஏற்படுத்தியுள்ளது. மேலும், சிசிஐயின் தலைவருக்கு, சோதனைகள் நடத்துதல் மற்றும் கைப்பற்றுதல் அதிகாரம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் நிறுவனங்கள் விவகாரத்துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) சச்சின் பைலட்.

புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை: உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் போது, சுற்றுச்சூழல் துறை ஒப்புதல், சட்ட ஒப்புதல், நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான விவகாரங்கள் உள்ளிட்டவை தொடர்பாக தாமதம் ஏற்படுகிறது. இதுபோன்ற தருணங்களில் குறிப்பிட்ட ஒரு அலுவலரை பொறுப்பாளியாக்குவது சிக்கலான விஷயம். கடந்த செப்டம்பர் 1ஆம் தேதி வரை, 560 திட்டங்களில், 272 திட்டங்களைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இவையனைத்தும் ரூ.150 கோடிக்கும் அதிகமான மதிப்புடைய திட்டங்கள்.

ரூ.1,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்த தனி நிதியமைப்பை ஏற்படுத்தும் திட்டத்துக்கு மத்திய அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. இதன் மூலம் உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவது துரிதப்படுத்தப்படும்.

தனியார் துறையில் ரூ,1,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்படும் போது, அதனை நிதிச் சேவைகள் துறை கண்காணிக்கும் என்றார் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை இணையமைச்சர் ஸ்ரீகாந்த் குமார் ஜேனா.

22nd nov 2012 P.M

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை

காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரித்துள்ளார்.

## கொடுவா மீன் வளர்ப்பு பயிற்சி

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், நெடுங்காடு அருகே உள்ள பொன்பேத்தி கிராமத்தைச் சேர்ந்த 25 விவசாயிகளுக்கு கொடுவா மீன் வளர்ப்பு பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது.

வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் மற்றும் மீன்வள தொழில்நுட்ப வல்லுநர் கோ. விஜயக்குமார் மீன் வளர்ப்பு முறை குறித்து விளக்கினார். மேலும், கோழி, வாத்து வளர்க்கும் முறை, குளக்கரையோரம் தீவனப்புல் வளர்த்தல், தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிட்டு லாபமீட்டுதல் குறித்து அவர் விளக்கமளித்தார்.

நிகழ்ச்சியில் மீன்வள உதவியாளர் ஜெ. முருகேசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

மஞ்சூர், நவ. 21: மஞ்சூர் அருகே உள்ள போர்த்தியாடாவில் வனத்துறை சார்பில் இலவச கால்நடை மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

÷தமிழ்நாடு உயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின்கீழ், உதகை தெற்கு வனக்கோட்டம் கவர்னர் சோலை வனச் சரகத்தின் சார்பில் நடைபெற்ற இந்த முகாமுக்கு வனச் சரகர் ராமசாமி தலைமை வகித்தார். ஊர்த் தலைவர் ராஜேந்திரன் வரவேற்றார். ஒன்றிய கவுன்சிலர் லலிதாமணி முகாமைத் தொடங்கி வைத்தார்.

÷இதில், கால்நடை உதவி மருத்துவர் செல்வபிரபாகரன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் கலந்துகொண்டு ஆடு, மாடு, கோழி, நாய், பூனை உள்ளிட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி, சினை ஊசி, குடற்புழு நீக்கம், கோழிக் கழிச்சல் தடுப்பூசி, ரேபிஸ் நோய் தடுப்பூசி உள்ளிட்ட மருத்துவ சிகிச்சைகளை அளித்தனர். கால்நடைகளைப் பராமரிப்பது குறித்தும்

விவசாயிகளுக்கு அறிவுரைகளை வழங்கினர்.

÷முகாமுக்கான ஏற்பாடுகளை வனவர் வீரைய்யன் தலைமையிலான வனத்துறை ஊழியர்கள் செய்திருந்தனர்.

## நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற

இறைவை நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் துணை இயக்குநர் ந. மேகநாதன் கூறியது:

தருமபுரி மாவட்டத்தில் அதிகப் பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்துப் பயிர் நிலக்கடலை. இப்போது, கார்த்திகைப் பட்டத்தில் (நவம்பர் 15 முதல் டிசம்பர் 15 வரை) இறவை நிலக்கடலை சாகுபடி செய்வதற்கு மிகவும் உகந்த பருவமாகும். இறவை நிலக்கடலையில் அதிக மகசூல் பெற நவீனத் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நிலம், உழவு: மணல்பாங்கான வண்டல், செம்மண் மற்றும் கருவண்டல் நிலங்கள் நிலக்கடலை சாகுபடிக்கு ஏற்றவை. மண்ணின் தன்மைக்கு தகுந்தபடி 4 அல்லது 5 முறை இரும்புக் கலப்பை அல்லது நாட்டுக் கலப்பைக் கொண்டு கட்டிகள் நன்கு உடையும் வரை உழவு செய்ய வேண்டும். கடைசி உழவுக்கு முன்பாக ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இட வேண்டும்.

விதை: ஏக்கருக்கு சிறிய பருப்பு ரகங்களாக இருந்தால் 50 கிலோவும், பெரிய பருப்பு ரகங்களாக இருந்தால் 55 கிலோ விதையும் தேவைப்படும். விதை கடினப்படுத்துதல் என்ற தொழில்நுட்பத்தின் மூலம் முளைக்காத விதைகளை தனியாக அப்புறப்படுத்தி நல்ல முளைப்புத் திறன் உள்ள விதைகளை மட்டும் விதைப்பதன் மூலம் செலவைக் குறைக்கலாம்.

வறட்சியைத் தாங்கி விதைகள் முளைத்து வளர கால்சியோம் குளோரைடு என்ற ரசாயனக் கரைசலில் விதைகளை ஊற வைத்து கடினப்படுத்தி பின்னர் விதைக்க வேண்டும்.

செய்முறை: விதைகளைக் கடினப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் கால்சியம் குளோரைடு என்ற அளவில் 28 லிட்டர் தண்ணீரில் 140 கிராம் கரைத்து கரைசால் தயார் செய்து அதில் ஓர் ஏக்கருக்குத் தேவையான விதைகளை 6 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். ஊற வைத்த விதைகளை ஈரமான கோணிப்பை மீது பரப்பி மற்றொரு கோணிப் பையால் 24 மணி நேரம் மூடி வைக்க வேண்டும். பின்னர், மேலே மூடியுள்ள கோணிப் பையை நீக்கி சிறிதளவு

முளைப்பு கண்ட விதைகளை தனியே பிரித்தெடுத்து நிழலில் உலர்த்த வேண்டும். இதேபோல, 2 மணி நேர இடைவெளியில் உலர்த்தி எடுத்து விதைப்பு செய்ய வேண்டும்.

பயன்கள்: விதைகளைக் கடினப்படுத்துவதன் மூலம் அவை வறட்சியைத் தாங்கி வளரும். விதைகளில் தண்ணீர் ஊடுருவும் திறன் அதிகரிக்கும். இளம் பயிர்களில் வீரியம் அதிகரிக்கும். பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க முடியும்.

உரமிடுதல்: இறவை நிலக்கடலைப் பயிருக்கு மண் ஆய்வு பரிந்துரையின்பேரில் உரம் இட வேண்டும். பொதுப் பரிந்துரையான 7 கிலோ தழைச்சத்து தரவல்ல 15 கிலோ யூரியா, 14 கிலோ மணிச்சத்து தரவல்ல 87.5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 21 கிலோ சாம்பல் சத்து தரவல்ல 35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களுடன் 80 கிலோ ஜிப்சம் சேர்து அடியுரமாக இட வேண்டும்.

நிலக்கடலை நுண்ணூட்டக் கலைவயை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் 20 கிலோ மணலுடன் கலந்து விதைத்தவுடன் மேலாக தூவ வேண்டும். விதைத்து 40 முதல் 45 நாள்களில் 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைப்பதன் மூலம் தரமான காய்கள் உருவாகி நல்ல மகசூல் கிடைக்கும்.

பூ பிஞ்சு உதிர்வதைத் தடுக்கவும், நல்ல வளர்ச்சியடைந்த முழுமையான பருப்புகளைப் பெறவும் ஊட்டச்சத்துக் கலவையைத் தெளிக்க வேண்டும். இந்தக் கலவை தயாரிக்க டிஏபி 1 கிலோ, அம்மோனியம் சல்பேட் 400 கிராம் மற்றும் போராக்ஸ் 200 கிராம் ஆகியவற்றை 15 லிட்டர் தண்ணீரில் ஒன்றாக கலந்து இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். மறுநாள் காலை இந்தக் கலவையை வடிகட்டினால் 13 லிட்டர் வரை தெளிந்த ஊட்டச்சத்து நீர் கிடைக்கும். இதை 187 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து 200 லிட்டர் தெளிப்பு திரவமாக தயாரிக்க வேண்டும். இந்தத் திரவத்துடன் 180 மி.லி. பிளானோபிக்ஸ் சேர்த்து விதைத்த 25 மற்றும் 35-ஆவது நாள்களில் தெளிப்பதன் மூலம் நிலக்கடலையில் அதிக மகசூல் பெறமுடியும் என்றார் அவர்.

## வேளாண் மானியத்தை நேரடியாக வழங்க வேண்டும்

சம்பா நெல் சாகுபடிக்கான மானியத்தை அரசு நேரடியாக விவசாயிகளிடம் வழங்க வேண்டும் என காங்கிரஸ் விவசாயப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அப்பிரிவின் மாநில துணைத் தலைவர் புலியூர் ஏ. நாகராஜன் விடுத்துள்ள அறிக்கை:

மேட்டூர் அணை தாமதமாகத் திறக்கப்பட்டதாலும், மின் பற்றாக்குறை காரணமாகவும் விவசாயிகள் சம்பா சாகுபடியை மிகவும் சிரமத்துக்கிடையே மேற்கொண்டுள்ளனர். சம்பா

சாகுபடி விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்துடன் தமிழக அரசு ரூ.80 கோடியை உர மானியமாக வழங்க உத்தரவிட்டது.

இதன்படி, கூட்டுறவு சங்கத்தில் யூரியா 82 கிலோ, டிஏபி 130 கிலோ, பொட்டாஷ் 50 கிலோ ஆகியவற்றை ஒரே நேரத்தில் வாங்கினால்தான் ரூ.1,100 மானியமாக கிடைக்கும் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இத்திட்டம் நவ.15-ம் தேதியுடன் முடிவடைந்தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு அறிவிப்பின்படி ஒரே நேரத்தில் ரூ.5,000 அளவுக்கு ரொக்கமாகச் செலுத்தி உரம் வாங்கினால் தான் மானியத் தொகை விவசாயிகளுக்கு கிடைக்கும். இதனால், பெரும்பாலான விவசாயிகள் இந்த மானியத்தைப் பெறவில்லை. சம்பா பயிரில் தற்போது களை எடுத்து உரமிட வேண்டிய தேவை இருப்பதால், உர மானியத்தை தொடர்ந்து வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட வேண்டும். மேலும், இந்த மானியத்தை உழவு, நடவு, களையெடுப்பு, பூச்சி மருந்து என அனைத்துக்கும் சேர்த்து ஏக்கருக்கு ரூ.5,000 என உயர்த்தி, அதை விவசாயிகளுக்கு ரொக்கமாக வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

## சம்பா பருவ முனைப்பு இயக்கம்

பேராவூரணி அருகேயுள்ள ரெட்டவயல் ஊராட்சியில் சம்பா முன்பருவ முனைப்பு இயக்கம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சித் தலைவர் திலீப்குமார் தலைமை வகித்தார்.

பாசன கமிட்டி தலைவர் ராமையன் முன்னிலை வகித்தார்.

விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மானியத் திட்டங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் கே. பெரியசாமி பேசியது:

சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரசாயன உரங்கள் 25 சதவீத மானிய விலையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் ஜிங்க்சல்பேட், நெல் நுண்ணூட்டம், ஜிப்சம், உயிர் உரங்கள் 75 சதவீத மானிய விலையில் பூக்கொல்லை வேளாண்மை விரிவாக்க மையம் மூலமாக விநியோகம் செய்யப்படுவதாகவும், நேரடி நெல் விதைப்பு செய்த விவசாயிகளுக்கு களைக்கொல்லி 50 சதவீத மானியத்திலும், விதை நெல் கிலோ ஒன்றுக்கு ரூ. 10 மானியமும், ஒரு ஏக்கர் உழவு செய்வதற்கு ரூ. 480 மானியமாக வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 3 ஆயிரம் மானியமாகவும், நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் திருந்திய நெல் சாகுபடி செய்வதற்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 4500 வழங்கப்படுகிறது.

விவசாயிகள் அனைவரும் தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் ஆர். மதியரசன், துணை வேளாண்மை அலுவலர்கள் மணிமாறன், உதவி வேளாண்மை அலுவலர்கள் முருகவேல், அண்ணாதுரை, ரவிச்சந்திரன், வீரப்பன், கருணாநிதி ஆகியோர் விவசாய தொழில்நுட்பங்கள் குறித்து பேசினர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் : 55.46 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 55.46 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 579 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 12,002 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து வினாடிக்கு காவிரியில் 501 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 6,200 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 1,804 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 705 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

## பாதிக்கப்பட்ட பயிர்களுக் கு விரைவில் நிவாரணம் '

நாகை மாவட்டத்தில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெல் பயிர்களுக்கு அரசின் நிவாரணம் கிடைக்க விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

நாகை மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட பாலக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் புதன்கிழமை நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் அவர் பேசியது:

நாகை மாவட்டம், தலைஞாயிறு மற்றும் கீழையூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கோடையில் ஏற்படும் குடிநீர் பிரச்னைக்கான நிரந்தர தீர்வு நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

கடல் நீர் உள்புகுந்து விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கவும், நிலத்தடி நீரைச் செறிவூட்டவும் ரூ. 1,500 கோடியில் அறிவிக்கப்பட்டுள்ள தொலைநோக்குத் திட்டத்தில் நாகை

மாவட்டத்துக்கு மட்டும் ரூ. 1,200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

தமிழக அரசின் நலத் திட்டங்கள் நாகை மாவட்டத்தில் விரைவாகச் செயல்படுத்தப்படுகின்றன. உழவர் பாதுகாப்புத் திட்டம் மூலம் அனைத்துத் துறைகளிலும் சலுகைககளைப் பெற முடியும். எனவே, விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர முனைப்புக் காட்ட வேண்டும்.

பாலக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். இப்பள்ளியில் சைக்கிள் நிறுத்துமிடத்துக்கு நிரந்தரக் கொட்டகை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்பகுதியில் நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகள் இயக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விவசாயப் பணிகளுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு நிலவிய நிலையில், கடந்த மாதம் தொடர் மழை பெய்ததால் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கிப் பாதிக்கப்பட்டன. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளை நிலங்கள் குறித்தக் கணக்கெடுப்பு அரசுக்கு அனுப்பப்பட்டு, நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார் ஆட்சியர்.

இதைத் தொடர்ந்து, 46 பேருக்கு ஆதரவற்ற விதவை மற்றும் முதியோர் உதவித் தொகைக்கான உத்தரவு, 56 பேருக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட முதியோர் உதவித் தொகை உத்தரவு, 13 பேருக்கு திருமண உதவித் தொகைக்கான காசோலை, 7 பேருக்கு இயற்கை மரண உதவித் தொகை, 4 பேருக்கு வீட்டுமனைப் பட்டா ஆகியவை வழங்கப்பட்டன.

மேலும் தோட்டக் கலை, வேளாண், வேளாண் கூட்டுறவுத் துறை சார்பில் இலவச காய்கனி விதைகள், தெளிப்பு நீர்ப் பாசனக் கருவி, பயிர்க் கடன் ஆகியவை வழங்கப்பட்டன.

முகாம் தொடர்பாக ஏற்கெனவே பெறப்பட்ட 196 மனுக்களில் 119 மனுக்கள் விசாரணைக்கு ஏற்கப்பட்டன. முகாமில் புதிதாக 105 மனுக்கள் பெறப்பட்டன.

நாகை வருவாய்க் கோட்டாட்சியர் வே. மணிகண்டன், கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் கு. பிருத்விராஜ், கீழ்வேளூர் வட்டாட்சியர் நாகராஜன், கீழையூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் என். மீனா, துணைத் தலைவர் வி.வி. வரதன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பரமேஸ்வரி வேதையன் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## சம்பா நெற்பயிரில் மஞ்சள் நோய் தாக்குதல்

நீரின்றி சம்பா பயிர்கள் முற்றிலும் கரு விடுமோ என்ற அச்சத்தில் இருக்கும் திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு பயிர்களில் ஏற்பட்டுள்ள மஞ்சள் நோய் மேலும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நிகழாண்டு திருவாரூர் மாவட்டத்தில் 1,87,381 ஏக்கர் நேரடி நெல் விதைப்பும் சுமார் 1.39 லட்சம் ஏக்கரில் பாரம்பரிய நடவும் செய்யப்பட்டுள்ளது.

குறித்த காலத்தில் தண்ணீர் இல்லாமல் தாமதமாக தொடங்கிய சம்பா பணி, தொடர் மழையால் பயிர்கள் பாதிப்பு, பிறகு நீர் வடிந்த பின் இருக்கும் பயிரைக் பாதுகாக்க நடவடிக்கை என விவசாயிகள் திக்குமுக்காட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழகத்துக்கு தண்ணீர் தர கர்நாடகம் மறுத்துவிட்டதால் தற்போது டெல்டா மாவட்டங்களில் லட்சக்கணக்கான ஏக்கரில் சம்பா பயிர் காய்ந்துபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் கச்சனம், அய்யூர்கொத்தங்குடி, குரும்பல், வேலூர், திருக்கொள்ளிக்காடு கோட்டூர் பகுதிகளில் பெருகவாழ்ந்தான், சித்தமல்லி, மண்ணுக்குமுண்டான், தெலுவத்தூர் உள்ளிட்டப் பகுதிகளில் சம்பா பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன. வயல்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

காவிரியில் குறைவாக தண்ணீர் வருவதால் கல்லணையில் முறைப்பாசனம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீர் கடைமடைப் பகுதிகளுக்கு குறைவாகச் செல்வதால் மேடான வயல்களில் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என விவசாயிகள் புலம்புகின்றனர்.

இந்த நிலையில் பயிர்களை இலைக் கருகல் நோயும், மஞ்சள் நோயும் தாக்கியுள்ளது. கச்சனம் மட்டுமன்றி மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் சம்பா பயிர்கள் கருகிப் போகும் நிலையில் உள்ளன. வயல்களில் அதிகம் வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் எலி வெட்டு அதிகமாக உள்ளது. பாமணி, கொற்கை, கொக்கலாடி பகுதிகளில் பெரியளவில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது என்கிறார் சிபிஎம் மாவட்ட துணைச் செயலரும் விவசாயியுமான வி.டி. கதிரேசன்.

ஏக்கருக்கு ரூ. 12,000 வரை செலவு செய்துள்ள நிலையில் தண்ணீர் இல்லாததால் சம்பா பயிர்கள் காய்கின்றன. நல்ல நிலையில் உள்ள பயிர்களைப் பாதுகாக்க குளம், குட்டை மற்றும் குறைவான அளவில் பாசன ஆறுகளில் இருக்கும் தண்ணீரைப் பயன்படுத்த தமிழக அரசு மானியத்தில் ஆயில் என்ஜின், டீசலும் வழங்க வேண்டும். வாட்டாறு, விக்கிரபாண்டியம் உள்ளிட்ட பகுதிகளில்

பல்லாயிரம் ஏக்கர் பயிர் தண்ணீர் இல்லாமல் காய்கிறது என்கிறார் அரிச்சந்திரநதி பாசனதாரர் சபைத் தலைவர் டி. பழனிவேல்.

**தூத்துக்குடி வேளாண்மைத் துறை அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடல்**

தூத்துக்குடியில் வேளாண்மைத் துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுடன் வேளாண்மைத் துறை அமைச்சர் செ. தாமோதரன் புதன்கிழமை கலந்துரையாடினார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மைத் துறை அதிகாரிகளுடன் மாவட்டத்தில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் குறித்து வேளாண்மைத் துறை அமைச்சர் செ. தாமோதரன் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, அமைச்சருடன் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் சந்தீப் சக்சேனா, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையர் சந்தோஷ் பாபு, மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார், சட்டப்பேரவை உறுப்பினர்கள் கடம்பூர் ராஜு, கிருஷ்ணசாமி ஆகியோர் உடனிருந்தனர். தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண் விளைப் பொருள்களின் உற்பத்தி விவரம், அவை பயிரிடப்படும் பகுதிகள் விவரம், வேளாண் பொருள்களுக்கு வேளாண்மைத் துறை மூலம் அளிக்கப்படும் சலுகைகள், பயன்பெறும் பயனாளிகள் குறித்த விவரங்களை அதிகாரிகளிடம் அமைச்சர் செ. தாமோதரன் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை விவசாயிகளுக்கு அவர் வழங்கினார்.

வேளாண் விளைப் பொருள்களின் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேளாண்மைத் துறை அதிகாரிகளை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இன்றைய வேளாண் செய்திகள்

23.11.2012 A.M

## மின்தடை எதிரொலி : விவசாயிகள் பாதிப்பு

ஒட்டன்சத்திரம்:விவசாயத்திற்கான மும்முனை மின் இணைப்பு, தினமும் மூன்று மணி நேரமே வினியோகிப்பதால், கிணற்றில் நீர் இருந்தும் பயன்படுத்த முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகளில் காய்கறிகள், தானிய வகைகள் அதிகமாக பயிரிடப்பட்டுள்ளன. விவசாய கிணறுகளில் ஓரளவிற்கு நீர் இருப்பு உள்ளது. நட்ட பயிர்களுக்கு உரிய நேரத்தில் நீர் பாய்ச்சினால்தான் குறிப்பிட்ட அளவிற்கு மகசூல் எடுக்க முடியும். பருவமழையும் பொய்த்து வருவதால், விவசாயிகள், கிணற்று நீரைத்தான் தற்போது நம்பி உள்ளனர். விவசாய மின் மோட்டாருக்கு தினமும் 3 மணி நேரம் மட்டுமே மும்முனை மின் இணைப்பு தரப்படுகிறது. இதனைக் கொண்டு முழு அளவில் நீர் பாய்ச்ச முடிவதில்லை. பயிர்களுக்கு ஒருசேர நீர் பாய்ச்சினால்தான் ஒரே அளவில் வளர்ச்சி அடையும். ஆனால் தற்போது உள்ள நிலைப்படி நீர் பாய்ச்சி முடிக்க சில நாட்கள் ஆகிறது. ஏற்கனவே விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறையினால் அதிக சம்பளம், உரம், பூச்சி மருந்து விலை ஏற்றத்தினால் சிரமத்தை அனுபவித்து வரும் விவசாயிகளுக்கு மேலும் ஒரு சுமையாக மின்பற்றாக்குறை உள்ளது. காவேரியம்மாபட்டியைச் சேர்ந்த விவசாயி கூறுகையில்,""தினமும் 3 மணி நேரம் கொடுக்கும் மின்சாரம் போதுமானதாக இல்லை, மும்முனை மின் இணைப்பு கொடுக்கும் நேரத்தை இன்னும் அதிகரிக்க வேண்டும்," என்றார்.

## விவசாயிகள் மனு

தேனி:குள்ளப்புரம் அருகே உள்ள சந்திராபுரம் கிராமத்தை சேர்ந்தவர்கள், தேனி கலெக்டர் பழனிசாமியிடம் கொடுத்த மனு: சதிராபுரம் கிராம மக்கள் விவசாயத்தை நம்பி தான் உள்ளனர். கடந்த எட்டு மாதங்களாக அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. மின்சாரம் வரும் போதும், விவசாயத்திற்கும், குடிநீருக்கும் மின் மோட்டார் இயக்க முடியவில்லை.இதனால் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். குடிநீருக்கு திண்டாட்டமாக உள்ளது. எனவே மோட்டார் இயக்க கூடிய அளவு மின்சப்ளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என தெரிவித்துள்ளனர்.

## நகை கடன் : விவசாயிகள் ஆர்வம்

தேனி:தேனி மாவட்ட விவசாயிகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் நகை கடன் பெற ஆர்வம் காட்டி வருகின்றனர்.தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் நகைகளை அடகு வைத்து விவசாய கடன் பெறுவதற்கு சிட்டா, பட்டா வழங்க வேண்டும். 10 சதவீதம் பங்கு தொகை கட்ட வேண்டும். 40 சதவீதம் உரமாக எடுக்க வேண்டும். இவ்வளவு ஆவணங்கள் கொடுத்தாலும், அடகு வைக்கப்படும், நகைகளுக்கு ஏற்ப கடன் கிடைப்பதில்லை.தேசிய வங்கிகளில் குறைந்த அளவான ஏழு சதவீதம் வட்டியில், அடகு வைக்கப்படும் நகைகளுக்கு ஏற்ப முழு பணமும் உடனடியாக வழங்கப்பட்டு விடுகிறது. ஆவணங்களும் கேட்பதில்லை. இதனால் விவசாயிகள் வட்டி சலுகை கிடைத்தாலும், கூட்டுறவு வங்கிகளை விட, தேசிய வங்கிகளில் கடன் பெற்றுள்ளனர்.

## சம்பா நெற்பயிருக்கு விவசாயிகள் டிச.,15க்குள் காப்பீடு செய்யலாம்

சிவகங்கை:""சம்பா நெற்பயிருக்கு, பயிர்கடன் பெறாத விவசாயிகள், டிச.,15க்குள் காப்பீடு செய்யலாம்," என, விவசாய இன்சூரன்ஸ் கம்பெனி, மண்டல மேலாளர் பாரதிவஜ்ரவேலு தெரிவித்தார்.அவர் கூறியதாவது: நடப்பாண்டு சம்பா நெற்பயிருக்கு, பயிர்கடன் பெறாத விவசாயிகள், டிச.,15க்குள் சேரலாம். நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.8,692 வழங்கப்படும். இதற்கு பிரீமியமாக பயிர்கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள், ரூ.78 செலுத்த வேண்டும். மற்ற விவசாயிகள் ரூ.87 கட்டவேண்டும். பயிர்கடன் பெறாத விவசாயிகள் சிட்டா, அடங்கல், வி.ஏ.ஓ., சான்று பெற்று, படிவத்துடன் வங்கியில் பிரீமியத்தை செலுத்தவேண்டும். கூடுதல் மதிப்பாக சம்பா நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.7604 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.465 பிரீமியம் கட்டவேண்டும். மற்ற விவசாயிகள் ரூ.517 கட்டவேண்டும். மேலும் விபரம் வேண்டுவோர், மண்டல மேலாளர், வேளாண் காப்பீடு கம்பெனி, மண்டல அலுவலகம், புதிய எண் 323, ஆந்திரா இன்சூரன்ஸ் பில்டிங், தம்புச்செட்டித்தெரு, பாரிமுனை, சென்னை - 1. போன்: 044 - 43403400 - 3416ல் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## கால்நடை மருத்துவ முகாம்

ஊட்டி:தமிழ்நாடு உயிர் பண்ணை பாதுகாப்பு மற்றும் பசுமையாதல் திட்டத்தின் கீழ், நீலகிரி தெற்கு வனக்கோட்டம் சார்பில் கவர்னர் சோலை வனசரகம் போர்த்தியாடா கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.ஆடு, மாடு, கோழி, நாய் உட்பட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, வயிற்றுப் போக்கு, குடற்புழு நீக்கம், சினை சம்மந்தப்பட்ட பிரச்னைகளுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டன. இத்தலார் கால்நடை டாக்டர் செல்வபிரபாகரன் குழுவினர் மருத்துவ பரிசோதனை செய்தனர்; 178 கால்நடைகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டன. இதில், நஞ்சநாடு ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் லலிதாமணி, ஊர் தலைவர் ராஜேந்திரன் மற்றும்

பலர் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை கவர்னர் சோலை ரேஞ்சர் ராமசாமி, பாரஸ்டர் வீரைய்யா உட்பட பலர் செய்திருந்தனர்.

## மானியத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்ய அழைப்பு

பெரம்பலூர்: "மானியத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்து பயன்பெறலாம்' என, பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

பெரம்பலூர் மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்வதற்கு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தில், 2012-2013ம் ஆண்டில், 500 ஹெக்டேருக்கு நிதியாக, 15 லட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கு, மூவாயிரம் ரூபாய் மானியத்தில், ஆயிரம் ரூபாய்க்கு வேளாண்துறை மூலம் இடுபொருட்களும், மீதமுள்ள, இரண்டாயிரம் ரூபாய்க்கு, 2.5 ஏக்கர் திருந்திய நெல் சாகுபடி நடவு செய்யப்பட்ட வயலை ஆய்வு செய்யப்பட்ட பின், பின்னேற்பு மானியமாக வங்கியால் வழங்கப்படும்.

திருந்திய நெல் சாகுபடியில் கூடுதல் விளைச்சல் தரக்கூடிய சான்று விதை அல்லது வீரிய ஒட்டு ரகத்தை தேர்வு செய்து, முறையாக மண் மாதிரி எடுத்து மண் ஆய்வு செய்ய வேண்டும். நெல் நடவுக்கு முன், பசுந்தாள் உர விதைகள் விதைத்து, 35 முதல், 45 நாட்களுக்குள் மடக்கி உழவு செய்ய வேண்டும். ஒரு ஹெக்டருக்கு, எட்டு கிலோ நெல் விதை அளவுடன், நடவுக்கு, 2.5 சென்ட் (அல்லது) 100 சதுர மீட்டர் நாற்றங்கால் பரப்பில் நடவு செய்து, தேவையான விதைகளை தூய்மைப்படுத்தி உயிர் உரம், உயிர் பூஞ்சான கொல்லி தெளிக்க வேண்டும்.

ஒரு சதுர மீட்டர் நாற்றங்காலுக்கு, 50 கிராம் விதையை சீராக தூவி, மேல் மட்டத்தை மட்கிய தொழு எருவால் மூடி, வைக்கோல் போர்வை போட்டு மூடி, பூ வாளியால் தண்ணீர் தெளித்து, மூன்று நாள்களுக்கு பிறகு வைக்கோல் போர்வையை நீக்கி விட்டு, ஈரப்பதத்தை காக்கும் வரையில் நீர் கட்ட வேண்டும். எட்டு முதல், 14 நாள் வயதுள்ள இளவயது நாற்றை, மார்க்கர் கருவியால் அடையாளம் செய்து, ஒரு மார்க்கருக்கு, ஒரு நாற்று என்ற வகையில், 22.5 செ.மீட்டர் இண்ட் 22.5 செ.மீட்டர் என்ற இடைவெளியில் சதுர நடவு முறையில் நடவு செய்து, நடவு செய்த, 10வது நாள் முதல் கோனோவீடர் களை எடுக்கும் கருவிக்கொண்டு, குறுக்கு நெடுக்காக களைகளை உருட்ட வேண்டும்.

இவ்வாறு, 10 நாட்கள் இடைவெளியில், 4 முறை உருட்ட வேண்டும். இலைவண்ண அட்டை அடிப்படையிலும், மண்மாதிரி ஆய்வு முடிவகளின்படி உர நிர்வாகம் செய்தால், கூடுதல் மகசூல் பெறலாம்.

## பூண்டி ஏரிக்கு 19 கன அடி மழை நீர் வரத்து

ஊத்துக்கோட்டை:பூண்டி ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதியில், 2.2 மி.மீ., மழை பெய்ததால், வினாடிக்கு, 19 கன அடி வீதம் ஏரிக்கு தண்ணீர் வருகிறது.

பருவ மழை பொய்த்ததால், சென்னை மக்களின் குடிநீர் தேவையை தற்போது பூண்டி ஏரியில் இருந்து, திறந்து விடப்படும் கிருஷ்ணா நீர் தீர்த்து வைக்கிறது.
இந்நிலையில், நேற்று முன்தினம் மாவட்டத்தின் பல பகுதிகளில் மழை பெய்தது. பூண்டி ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதியில், பெய்த மழை காரணமாக ஏரிக்கு வினாடிக்கு, 19 கன அடி வீதம் தண்ணீர் வருகிறது.நேற்று காலை 6:00 மணி நிலவரப்படி, கிருஷ்ணா நீர் வினாடிக்கு, 93 கன அடி வீதம் வந்து கொண்டிருக்கிறது. ஏரியின் முழு கொள்ளளவான, 3,231 மில்லியன் கன அடியில் தற்போது, 890 மில்லியன் கன அடி நீர் உள்ளது. நீர்மட்டம், 25.31 அடி. இங்குள்ள இணைப்பு கால்வாய் மற்றும் பேபி கால்வாய் மூலம் வினாடிக்கு, 175 கன அடி நீர் சென்னை புழலேரிக்கு திறந்து விடப்பட்டு உள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதியில், 2.2 மி.மீ., மழை பெய்து உள்ளது.

## மானியத்துடன் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டம்

திருவள்ளூர்:சம்பா நெற்பயிருக்கான, மானியத்துடன்கூடிய தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில், விவசாயிகள் சேரலாம் என, அதன் மண்டல மேலாளர் பாரதி அறிவித்து உள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டு உள்ள அறிக்கை:இவ்வாண்டு சம்பா நெற்பயிருக்கு, தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில், பயிர் கடன் பெறாத விவசாயிகள் சேருவதற்கு டிச., 15ம் தேதி கடைசி நாள். சம்பா நெற்பயிருக்கு, ஒருஏக்கருக்குமொத்த மதிப்பு, 8,692 ரூபாய். இதற்கு பிரிமியமாக பயிர் கடன் பெறாத விவசாயிகள் செலுத்த வேண்டியது, ஒரு ஏக்கருக்கு, 78 ரூபாய் மட்டுமே.
விவசாயிகள் பிரிமியம் செலுத்த சிட்டா, அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று பெறப்பட்டு, அவரவர்கள் தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியிலேயே, பிரிமியத்தை செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.இதற்கான படிவங்களை அருகில் உள்ள வேளாண் துறையிலோ, கூட்டுறவு மற்றும் வர்த்தக வங்கியிலோ பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## கல்லாறு அணை திட்டம் செயல்படுத்த விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம்

ஆத்தூர்: "ராமநாயக்கன்பாளையம் கல்லாறு அணை திட்டம் செயல்படுத்தவும், பைத்தூர் பஞ்சாயத்தில், மலைவாழ் மக்கள் வசிக்கும் கிராமங்களை தனி பஞ்சாயத்தாக பிரிக்க வேண்டும்' என, ஆத்தூரில் நடந்த விவசாயிகள் சங்க மாவட்ட மாநாட்டு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.
சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சி, அண்ணா கலையரங்கில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின், தமிழ்நாடு விவசாயிகள் சங்க, 21வது மாவட்ட மாநாடு நடந்தது.
மாநாட்டில், அரசு தரிசு, புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகளாக, விவசாயம் செய்யும் நிலங்களுக்கும், வீடு இல்லாத ஏழை மக்களுக்கு, இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும்.
ராமநாயக்கன்பாளையம் சிற்றணை எனும் கல்லாறு அணை திட்டத்துக்கு, நிதி ஒதுக்கீடு செய்து,

அணை கட்ட வேண்டும். விவசாய உற்பத்தி பொருட்களுக்கு, விலை நிர்ணயம் செய்தல், உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளை, மானிய விலையில், தட்டுப்பாடு இல்லாமல் வழங்க வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை சேமித்து வைத்து, விற்பனை செய்யும் வகையில், குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும். மரவள்ளி கிழங்கு விவசாயத்தை பாதுகாக்க, கட்டுப்படியான விலை நிர்ணயம் செய்து, தரகர்களை தடை செய்ய வேண்டும்.

பருவ மழை தவறியதால், சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். வாழப்பாடி பேரூராட்சியில், உழவர் சந்தை அமைக்க வேண்டும். ஆத்தூர் யூனியன், பைத்தூர் பஞ்சாயத்தில், தவளப்பட்டி, கல்லுக்கட்டு, முருவம், வானபுரம் ஆகிய கிராமங்களில், மலைவாழ் மக்கள் அதிகளவில் வசிக்கின்றனர். எனவே, பைத்தூர் பஞ்சாயத்தை, பைத்தூர் மற்றும் தவளப்பட்டி என, இரண்டு பஞ்சாயத்துகளாக பிரிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, விவசாயிகள் சங்கத்தின் சார்பில், கோரிக்கை விளக்க பேரணி, பொதுக்கூட்டம் நடந்தது. மாநில பொதுச்செயலாளர் சண்முகம், மாநில துணைத் தலைவர்கள் சுப்ரமணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் விவசாயி கூட்டத்தில் தீர்மானம்

பள்ளிபாளையம்: "கரும்பு டன் ஒன்றுக்கு, 4,000 ரூபாய் வழங்க வேண்டும்' என, பாப்பம்பாளையத்தில் நடந்த கரும்பு விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பள்ளிபாளையம் அருகே பாப்பம்பாளையத்தில், பொன்னி சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம் நடந்தது.

சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். கூட்டத்தில், 2012-13ம் ஆண்டு கரும்புக்கு அரசு அறிவித்துள்ள விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாது. உரவிலை மற்றும் ஆட்கூலி, டீஸல் விலை உயர்வு, மின் தட்டுப்பாடு ஆகியவை காரணமாக, கரும்பு உற்பத்தி செலவு கூடுதல் ஆகியுள்ளது.

இந்தாண்டு கரும்பு டன் ஒன்றுக்கு, 4,000 ரூபாய் கொடுக்க வேண்டும். நடப்பு பருவத்திற்கு கரும்பு பயிர் செய்யும் விவசாயிகளுக்கு விதை கரணைகளை இலவசமாக ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும்.

தற்போது, அரசு அறிவித்துள்ள விலைக்கு, கரும்பு வெட்டப்போவதில்லை என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்க செயலாளர் தங்கவேல், பொருளாளர் சத்தியமூர்த்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

## பார்த்தீனியம் செடி அகற்றும் முகாம்

சேந்தமங்கலம்: சேந்தமங்கலம் அருகே ராமநாதபுரம்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில், பார்த்தீனியம் செடியை அகற்றும் முகாம் நடந்தது.

பள்ளி தலைமையாசிரியர் தியாகராஜன் தலைமை வகித்தார். தொடர்ந்து, பள்ளி வளாகத்தில் வளர்ந்துள்ள பார்த்தீனியம் செடிகளை, சாதாரண உப்பு கலந்த தண்ணீர் தெளித்தும், வேறுடன் பிடுங்கி அகற்றப்பட்டது. மேலும், பார்த்தீனியம் செடிகளின் தீமை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.பள்ளி ஆசிரியர்கள் செந்தில்அரசு, செல்வராஜ், தவமணி உட்பட பலர் பங்கேற்றனர்.

## நிலக்கடலை உயர் விளைச்சல் தொழில்நுட்பம் :வேளாண் துறை அறிவுரை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்யப்படும் நிலக்கடலை பயிர் உயர் விளைச்சலுக்கான தொழில் நுட்பங்கள் குறித்து, வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில், அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்து பயிர் நிலக்கடலையாகும். தற்போது, கார்த்திகை பட்டத்தில், (நவ., 15 முதல் டிச.,15 முடிய) இறவை நிலக்கடலை சாகுபடி செய்ய மிகுந்த ஏற்ற தருணமாகும். இறவை நிலக்கடலையில், அதிக மகசூல் பெற, நவீன தொழில் நுட்பங்களை, விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும்.

மணற்பாங்கான வண்டல், செம்மண் மற்றும் கருவண்டல் நிலங்களில் நிலக்கடலை சாகுபடிக்கு ஏற்றவை. மண்ணின் தன்மைக்கு ஏற்ப நான்கு அல்லது ஐந்து முறை இரும்புக்கலப்பை அல்லது நாட்டு கலப்பை கொண்டு கட்டிகள் நன்கு உடையும் வரை உழவு செய்ய வேண்டும்.

கடைசி உழவுக்கு முன் ஏக்கருக்கு, ஐந்து டன் தொழு உரம் இட வேண்டும். ஏக்கருக்கு சிறிய பருப்பு ரகங்களாக இருந்தால், 50 கிலோவும், பெரிய பருப்பு ரகங்களாக இருந்தால், 55 கிலோ விதை தேவைப்படும். விதை கடினப்படுதுலூதுதல் என்ற தொழில் நுட்பத்தின் மூலம் முளைக்காத விதைகள் தனியாக அப்புறப்படுத்தி விட்டு, நல்ல முறைப்பு திறனுள்ள விதைகள் மட்டும் விதைப்பதன் மூலம் செலவை குறைப்பதுடன் பயிர் எண்ணிக்கை சரியாக பராமரிக்கலாம்.

வறட்சியை தாங்கி விதைகள் முளைத்து வளர விதைகளை கால்சியம் குளோரைடு ரசாயன கரைசலில் ஊற வைத்து கடினப்படுத்தி பின் விதைக்க வேண்டும். இம்முறையில் விதைகளை கடினப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரும், ஐந்து கிராம் கால்சியம் குளோரைடு என்ற அளவில், 28 லிட்டர் தண்ணீரில், 140 கிராம கரைத்து, கரைசல் தயார் செய்து அதில், ஒரு ஏக்கருக்கு தேவையான விதையை ஆறு மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

ஊற வைத்த விதைகளை ஈரச்சாக்கின் மீது பரப்பி அதை மற்றொரு ஈரச்சாக்கால், 20 முதல், 24 மணி நேரம் மூடி வைக்க வேண்டும். பின்னர் மேலே மூடியுள்ள சாக்கி நீக்கி, சிறிதளவு முறைப்பு

கண்ட விதைகளை தனியாக பிரித்தெடுத்து நிழலல் உலர்த்தவும்.
பின்னர் மீண்டும் ஈரச்சாக்கால் மூடி, இரண்டு மணி நேர இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று முறை சிறிய முளைப்பு கண்ட விதைகளை பிரித்தெடுத்து, நிழலில் உலர்த்தி பின் விதைப்பு செய்யவும். இவ்வாறு விதைகளை கடினப்படுத்துவதன் மூலம் விதைகள் வறட்சியை தாங்கி வளரும், விதைகளில் தண்ணீர் ஊடுருவும் திறன் அதிகரிக்கிறது.
இளம் பயிர்களில் பயிர் வீரியம் அதிகரிக்கும். முளைக்கும் தன்மையுள்ள விதைகள் கண்டறிந்து விதைப்பதால், பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும். விதைக்கும் முன் முதலில் விதைகளை உயிரியல் பூஞ்சானக் கொல்லியான, "டிரைக்கோடர்மா விரிடி' என்ற பூசணம் ஒரு கிலோ விதைக்கு, நான்கு கிராம் அல்லது சூடோமோனாஸ், 10 கிராம் என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
பின்னர் விதைக்கும் முன் உயிர் உரங்களான நிலக்கடலை ரைசோபியம் மற்றும் பாஸ்போபேக்டீரியா தலா இரண்டு பொட்டலங்களை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து, நிழலில் உலர்த்தி பின் 24 மணி நேரத்துக்குள் விதைப்பு செய்ய வேண்டும்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பருவமழை ஏமாற்றம் விவசாயிகள் கலக்கம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பருவ மழை கைவிட்டதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
தர்மபுரி மாவட்டத்தில், ஆண்டு சராசரி மழையளவு, 800 மி.மீ., ஆகும். பெரும்பாலான ஆண்டுகளில், சராசரி மழையளவு பெய்வது கிடையாது. இதனால், மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் மாற்று தொழிலுக்கு மாறுவதுடன், வேலை வாய்ப்புக்காக அருகில் உள்ள சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை போன்ற மாவட்டங்களுக்கும், பெங்களூரு, கேரளா போன்ற மாநிலங்களுக்கும் வேலைக்குச் சென்றனர்.
மாவட்டத்தில் உள்ள பலர், தேசிய ஊரக வேலைவாய்ப்பு பணிகளுக்கு சென்றனர். விவசாயத்தை கை விட விரும்பாத பலர், மாவட்டத்தில் பெய்து வரும் மழையளவிற்கு தகுந்த சொட்டு நீர் பாசன உள்ளிட்ட மாற்று தண்ணீர் சேமிப்பு பணிகளில் விவசாய பணிகளை தொடர்ந்து செய்து வந்தனர்.
இந்தாண்டு, தென்மேற்கு பருவ மழை கைவிட்டதை தொடர்ந்து, ஏமாற்றம் அடைந்த விவசாயிகள், வடகிழக்கு பருவமழை பெரிதும் நம்பி இருந்தனர். இதுவரை, தர்மபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருமழையும் போதிய அளவு பெய்யாத நிலையால், விவசாயிகள் மேலும் கவலை அடைந்துள்ளனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

23.11.2012 A.M

## மேட்டூர் அணை நீர்மட்டம் 54.05 அடி



மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நேற்று மாலை நிலவரப்படி வினாடிக்கு 746 கனஅடியாக நீர் வரத்து இருந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 12,000 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. வரத்தை விட, திறப்பு அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 54.05 அடியாக குறைந்தது. நீர் இருப்பு 20.45 டி.எம்.சி.

இன்றைய வேளாண் செய்திகள்

23.11.2012 A.M

**தேனி மாவட்டத்தில் இருந்து கேரள மாநிலத்திற்கு ஏற்றுமதியாகும் பூக்கள் மல்லிகை பூ கிலோ ரூ.800–க்கு விற்பனை**

தேனி மாவட்டத்தில் இருந்து கேரள மாநிலத்திற்கு பூக்கள் ஏற்றுமதியாகின்றன. கோவில் விழாக் காலம் தொடங்கி உள்ளதால், மல்லிகை பூ விலை கிலோ ஒன்றுக்கு ரூ.800–க்கு விற்பனை ஆகிறது.

**பூக்கள் சாகுபடி**

தேனி மாவட்டத்தில் கோட்டூர், சீலையம்பட்டி, உப்புக்கோட்டை, பாலார்பட்டி, தேவாரம், வாழை யாத்துப் பட்டி, பூதிப்புரம், அரப்படித் தேவன்பட்டி, ஆண்டிப் பட்டி, மரிக்குண்டு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பூக்கள் சாகுபடி அதிகளவில் நடை பெறுகிறது. குறிப்பாக இந்த பகுதிகளில் மல்லிகை, கனகாம்பரம், செண்டு பூ, கோழிக் கொண்டை பூ உள்பட பல்வேறு வகையான பூக்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்த பகுதிகளில் விளை யும் பூக்கள், சீலையம்பட்டி, ஆண்டிப் பட்டி, தேனி ஆகிய ஊர்களில் உள்ள பூ மார்க் கெட்டுகளுக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஒரு வாரகால மாக தேனி மாவட்டம் முழுவதும் பனிப்பொழிவு அதிகரித்து உள்ளது. இதனால் பூக்கள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

**விலை உயர்வு**

இந்நிலையில், சபரிமலை அய்யப்பன் கோவில் மற்றும் முருகன் கோவில்களில் விழாக்கால வழிபாடுகள் தொடங்கி உள்ளது. குறிப்பாக அய்யப்ப மற்றும் முருக பக்தர்கள் மாலை அணிந்து விரதம் இருந்து வருகின்றனர். இதையொட்டி கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் அதிகரித்து உள்ளதால் பூக்களின் தேவையும் அதிகரித்து உள்ளது. கேரள மாநிலத்திற்கு அருகே உள்ள தேனி மாவட்டத்தில் இருந்து சபரி மலை அய்யப்பன் கோவில் பகுதிக்கும், இடுக்கி மாவட்டத்திற்கும் பூக்கள் ஏற்றுமதி தற்போது அதிகரித்து உள்ளது.

ஏற்கனவே பனிப்பொழிவு காரணமாக பூ மார்க் கெட்டிற்கு பூக்கள் வரத்து குறைந்த நிலையில், தற்போது கோவில் விழாக்காலங்கள் காரணமாக பூக்களின் தேவை அதிகரித்து உள்ளதால் பூக்களின் விலை கணிசமாக உயர்ந்து வருகிறது.

இதில் குறிப்பிட்டு சொல்லும்படியாக மல்லிகை, கனகாம்பரம் பூக்கள் ஒரு கிலோ ரூ.800 என்ற விலைக்கு கேரள மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்படு கிறது. உள்ளூர் மார்க்கெட்டில் இந்த பூக்களின் விலை கிலோ ரூ.500 முதல் ரூ.600 என்ற அளவில் விற்பனையாகிறது.

தேனி பூ மார்க்கெட்டில் நேற்றைய பூக்கள் விலை விவரம் (ஒரு கிலோவிற்கு) வருமாறு:–

ஜாதிப்பூ–ரூ.400, சம்பங்கி பூ–ரூ.300, கோழிக் கொண்டை– ரூ.40, செண்டு பூ–ரூ.50, ரோஜா பூ–ரூ.50, பட்டன் ரோஸ்–ரூ.200.

## ராமநாதபுரம் பகுதியில் நவீன இயந்திர நெல் நடவு தொழில்நுட்பம் அறிமுகம்

ராமநாதபுரத்தில் நவீன இயந்திர நடவு தொழில் நுட்பத்தின் மூலம் நெல் சாகுபடி பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகி றது.

**நெல் சாகுபடி**

ராமநாதபுரம் மாவட்டத் தில் சுமார் 1 லட்சத்து 25 ஆயிரம் எக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்தை பொருத்தவரை புழுதி விதைப்பு முறையில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக கோடை உழவு செய்யப்பட்ட வயல்களில் புழுதி உழவு மேற் கொள்ளப்பட்டு கை விதைப் பாக வறள் விதைகளை விதைத்து வந்தனர். இதனால் போதுமான பயிர் இடை வெளி இல்லாமல் நோய் தாக் குதல் அதிகமாகி குறைவான மகசூல் கிடைக்கப்பெற்றது.

இதற்கு தீர்வாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழ கத்தை சார்ந்த வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞா னிகளால் டிராக்டரினால் இயக்கப்படும் விதைக்கும் கருவி அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது பெரும்பான்மை யான விவசாயிகளால் பயன் படுத்தப்பட்டு வருகிறது. இத் தகைய புழுதி விதைப்பு செய்ய முடியாமல் நடவு மட்டும் தான் செய்ய முடியும் என்ற சூழ்நிலையில் விவசாயிகள் சேற்று உழவு, நாற்றங்கால் பராமரிப்பு, உருளை அடித் தல், பரம்பு அடித்தல், நடவு செய்தல் மற்றும் களை எடுத்தல் போன்றவற்றுக்கு ஆட்களை கொண்டு செய்து வந்தனர். இதனால் ஆட்கள் பற்றாக்குறை மற்றும் அதிக கூலி காரணமாக அதிக முத லீடு செய்ய வேண்டிய சூழ் நிலையில் இருக்கின்றனர்.

**நவீன நடவு இயந்திரம்**

இவற்றை எளிமைப்படுத் தும் விதமாக வேளாண் அறி வியல் நிலையம் சார்பில் நவீன நடவு இயந்திரம் அறிமுகப்ப டுத்தப்பட உள்ளது. இதன் மூலம் விதைகளை சீராக விதைக்க முடிகிறது. மேலும் இயந்திரம் வரிசையாக நடவு செய்யும் போது போதுமான இடைவெளி மற்றும் காற் றோட்டம் கிடைப்பதால் அதிக மகசூல் பெற வாய்ப்புள் ளது. மேலும் இந்த முறையில் களையெடுப்பது மிகவும் எளி தானது. இந்த தொழில் நுட் பத்தை ராமநாதபுரம் யூனி யன் களத்தாவூர் கிராமத்தில் விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த தகவலை முனைவர்கள் துக்கையண் ணன், விஜயராகவன் ஆகி யோர் தெரிவித்தனர்.

**கரும்பு டன்னுக்கு ரூ.3500 வழங்க கோரி திருமானூரில் கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் கரும்பை எரிக்க முயற்சித்ததால் பரபரப்பு**

கரும்பு டன்னுக்கு ரூ.3 ஆயிரத்து 500 வழங்க கோரி திருமானூரில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் கருப்பு பேட்ஜ் அணிந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். மேலும் ஆர்ப் பாட்டத்தில் சங்கத்தினர் கரும்பை தீயிட்டு எரிக்க முயற்சி செய்ததால் போலீ சாருக்கும், சங்கத்தி னருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

**4–வது வட்ட மாநாடு**

திருமானூரில் கரும்பு விவசாயிகள் சங்க 4–வது வட்ட மாநாடு மாவட்ட தலைவர் வைத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சங்கத்தின் பொறுப்பாளர்கள் முன்னிலை வகித்தனர். விவசாய சங்க வட்ட செயலாளர் வரப் பிர சாதம் வரவேற்றார். கரும்பு விவசாய சங்க மாநில துணை செயலாளர் அன்பழகன், மாவட்ட செயலாளர் மணி யன், மாவட்ட பொருளாளர் புண்ணியமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு கரும்பு விவசாய சங்க மாநில தலைவர் காமராஜ் பல்வேறு தீர்மானங்கள் குறித்து சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் லோடுமேன் சங்க மவட்ட செயலாளர் புனிதன், ஒன்றிய செயலாளர் சந்தோஷ், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க பொறுப்பாளர்கள் ஜீவா, அருமைதாஸ் மற்றும் கரும்பு விவசாய சங்க பொறுப் பாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**டன்னுக்கு ரூ.3500**

தொடர்ந்து தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் கருப்பு பேட்ஜ் அணிந்து கையில் கரும்புடன் ஊர்வலமாக வந்து திருமானூர் பரிசல்துறை அருகில் கரும்பு டன்னுக்கு ரூ.3 ஆயிரத்து 500 வழ்க வேண்டும். தமிழக அரசு அறிவித்துள்ள ரூ.2 ஆயிரத்து 350 விலையை வாபஸ் பெற

வேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் மாநில தலைவர் காமராஜ் மற்றும் பொறுப்பாளர்கள் கரும்பை தீயிட்டு எரிக்க முயற்சி செய்தனர். அப்போது அங்கு வந்த திருமானூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாரதிதாசன் அதனை தடுத்து நிறுத்தி உங்களுக்கு அனுமதி யில்லை. கரும்பை எரிக்கக் கூடாது என தடுத்தார்.

**வாக்குவாதம்**

அதற்கு மாநில தலைவர் காமராஜ் விவசாயிகளுக்காக போராடும் எங்களுக்கு எப் போதும் காவல்துறை அனுமதி தராது. அரசு அறிவித்துள்ள கரும்பு விலையை வாபஸ் பெற வேண்டும். கரும்பு டன்னுக்க ரூ.3500 வழங்க வேண்டும் என்பதை வலியுறுத் திதான் இதை செய்கிறோம் என்றார். உங்களுக்கு இதற்கு அனுமதி இல்லை. பொதுக் கூட்டத்திற்கு மட்டும்தான் அனுமதி என இன்ஸ்பெக்டர் கூறியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து கரும்பு விவசாய சங்க மாவட்ட தலைவர் வைத்தியலிங்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடை பெற் றது. கூட்டத்தில் கரும்பு விவசாய சங்க மாநில துணைத் தலைவர் அன்பழகன், மாவட்ட செயலாளர் மணி யன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாநில தலைவர் காமராஜ் பேசுகை யில், தமிழக முதல்–அமைச்சர் அறிவித்துள்ள கரும்பு டன் னுக்கு ரூ.2 ஆயிரத்து 350 விலையை வாபஸ் பெற வேண்டும். இது விவசாயிகளை ஏமாற்றும் விதமாக அமைந் துள்ளது.

**மும்முனை மின்சாரம்**

மேலும் வெட்டு கூலி, வண்டி வாடகையை ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும். தொடர் மின் வெட்டை அரசு நீக்கி தொடர்ந்து 16 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். பிரதமர் தலைமை யிலான பொருளாதார மேம் பாட்டுக் குழு ரெங்கநாதன் கமிட்டியின் கரும்பு விவசாயி களுக்கு பாதகமான பரிந்துரை யினை மத்திய, மாநில அரசுகள் ஏற்கக் கூடாது என்பது உள்பட பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தி பேசினார். கூட்டத்தில் கரும்பு விவசாய சங்க பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண் டனர்.

**ஊட்டியில் , உருளைக்கிழங்கு அதிக விலைக்கு விற்பனையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சி**

ஊட்டியில் உருளைக்கிழங்கு அதிக விலைக்கு விற்பனையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**மலை காய்– கறிகள்**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டி, கோடப்பமந்து, தும்மனட்டி, அணிக்கொரை, எப்பநாடு, கப்பச்சி, கேத்தி பாலடா, நஞ்சநாடு, நடுவட்டம், ஆடர் சோலை உள்பட பல்வேறு இடங்களில் உள்ள விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் விவசாயம் செய்து வருகிறார்கள். இவர்கள் தங்களுடைய நிலங்களில் மலை காய்–கறிகளான உருளைக்கிழங்கு, முட்டை கோஸ், கேரட், பீன்ஸ், பட்டாணி, பஜ்ஜி மிளகா, குடை மிளகா, பீட்ரூட், வெள்ளை பூண்டு உள்பட பல்வேறு காய்– கறிகளை பயிர் செய்து வருகிறார்கள்.

**உருளைக்கிழங்கு**

தற்போது, உருளைக்கிழங்கு பயிரிடும் சீசன் என்பதால் ஏராளமான விவசாயிகள் தங்களுடைய நிலங்களில், உருளைக்கிழங்கை பயிர் செய்து உள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் உருளைக் கிழங்குகள் ஊட்டி மற்றும் மேட்டுப்பாளையம் சந்தைகளுக்கு விவசாயிகள் எடுத்து சென்று விற்பனை செய்து வருகிறார்கள்.

தற்போது, உருளைக்கிழங்குக்கு தேவை அதிகரித்து உள்ளதால் ஒரு கிலோ உருளைக்கிழங்கு ரூ.25 முதல் 30 வரை சந்தையில் விற்பனை ஆகிறது. இதனால், விவசாயிகள் நல்ல லாபம் அடைந்து வருகின்றனர்.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

இதுகுறித்து, விவசாயிகள் கூறுகையில், நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் உருளைக்கிழங்குகள் பயிரிடுவது வழக்கம். அதேப்போல் இந்த ஆண்டும் உருளைக்கிழங்கை பயிர் செய்து உள்ளோம்.

தற்போது, பண்டிகை காலம் என்பதனால் உருளைக்கிழங்கிற்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.